*9*

# ஆறு மணி நேரம், 1

## மத்தேயு 27:33-44; மாற்கு 15:22-32; லூக்கா 23:33-43; யோவான் 19:17-27

*"கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்" (லூக்கா 23:33).*

*ஆறு மணிநேரம்!* இரட்சிப்பு ... ஜீவன் ... நம்பிக்கை ... பரலோகம்! இயேசு ஆறுமணி நேரம் சிலுவைமீது இருந்தார் (மாற்கு 15:25-37). (யூதர்களின் காலக்கணக்குப்படி) மூன்றாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரை என்பது காலை 9:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையிலான நேரத்திற்குச் சமமானதாக உள்ளது. இந்த ஆறுமணி நேரங்களை இரு சமபாகங்களாகப் பிரிக்கலாம். தேவன் அவற்றை பிரித்துள்ளார். ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணி நேரம் வரை, தேவன் முழுமையான இருளை அனுப்பினார் (மத்தேயு 27:45; மாற்கு 15:33; லூக்கா 23:44). ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு மரித்தார்.

இயேசுவின் மரணம் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற மரணமாக உள்ளது. இதுவே கிறிஸ்தவம் கொண்டுள்ள, விரும்புகிற, அல்லது தேவைப் படுகிற யாவுமாக உள்ளது. பவுல், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 2:2). இதுவே பவுல் அறிந்த எல்லாவற்றின் மற்றும் அவர் பிரசங்கித்த எல்லா வற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது (1 கொரிந்தியர் 1:17-25).

### கூறப்படாத விவரங்கள்

நாம் மிகச்சிறிதளவே அறிந்திருக்கிறோம்! விவரங்கள் கொஞ்சமே இருக்கின்றன. சிலுவையில் அறையப்பட்டதற்கு சாட்சியமாக இருந்த ஒரே அப்போஸ்தலர் யோவான் மாத்திரமே. (வரலாற்றாளரான) லூக்கா, சிலுவையை ஒரு வசனத்தில் ஒரே ஒரு சிறு வாக்கியமாகக் குறுக்கினார்: "அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" (லூக்கா 23:33ஆ). அவர் சிலுவையில் அறையப்பட்டதைக் காட்டிலும் அவரது அடக்கம் பற்றி

அதிகமாக நாம் அறிகிறோம். நாம் பதில்களைக் காட்டிலும் அதிகமான கேள்விகளைக் கொண்டுள்ளோம்.

சிலுவையின் வடிவம் பற்றி நாம் அறிவதில்லை. “X” வடிவிலான சிலுவை என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. ஆங்கில மொழியின் “T” என்ற எழுத்தின் வடிவம் போன்ற Tau சிலுவையும் உள்ளது. பிலாத்து, இயேசுவின் தலைக்குமேல் ஒரு மேல்விலாசத்தை வைக்கச் செய்திருந்ததால், இதுவும்கூட நீக்கப்பட்டுள்ளது. கூட்டல் வடிவத்திலான லத்தீன் சிலுவையே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் படங்கள், ஆபரணங்கள், மற்றும் கட்டிடக்கலை வடிவங்கள் ஆகியவற்றில் பரவலாக வைக்கப்பட்டு உள்ளதுமான உலகளாவிய சிலுவையாக உள்ளது. ஆராய்ந்து பார்க்கப்படாத வகையில், கூட்டல் குறி அடையாளமானது “சிலுவை அடையாளம்” என்று அழைக்கப்படுகிறது.

பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதுவித்து அதை சிலுவையில் இயேசுவிற்கு மேலாக வைக்கச் செய்தான் (மத்தேயு 27:37; மாற்கு 15:26; லூக்கா 23:38; யோவான் 19:19). இதைப் பற்றிய ஒவ்வொரு [சுவிசேஷ] விவரமும் மாறுபட்டுள்ளன, ஆனால் இவையாவும் ஒரே விஷயத்தைக் கூறுகின்றன. எழுத்தாளர்கள் மிகச்சரியான வார்த்தைகளில் அல்ல, ஆனால் அவர்களின் மூலம் தரப்பட்ட விஷயங்களின்மீதுதான் ஆர்வமாக இருந்தனர்.

இயேசு சிலுவையில் எவ்வாறு ஆணிகளால் அறையப்பட்டார்? நாம் அதை அறிவதில்லை. இயேசு உயிர்த்தெழுந்த நாள் பற்றி நாம் அறிகிறோம்: வாரத்தின் முதல் நாளாகிய, ஞாயிற்றுக்கிழமை (மத்தேயு 28:1-7; மாற்கு 16:2-9; லூக்கா 24:1-7; யோவான் 20:1-10). இவ்விடத்தில் விவாதம் ஒன்றும் இல்லை. தொடக்ககால சபையானது வாரத்தின் அந்த நாளிலேயே கூடி வந்தது (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2).

இருப்பினும், சிலுவையில் அறையப்பட்ட நாளானது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. அந்த நாளைக் கண்டறிவதற்கு, நாம் பின்னோக்கிக் கணக்கிட வேண்டும். இயேசு “மூன்றாம் நாளில்”[1] உயிர்த்தெழுந்தார் என்று சுவிசேஷங்கள்[2] பத்துமுறை குறிப்பிடுகின்றன. சிலுவையில் அறையப்பட்ட வேளை என்பது, விவாதத்திற்கு உரியதாக இருப்பினும், அந்த நாளானது ஆயத்தநாளாகவும் ஓய்வு நாளுக்கு முந்திய நாளாகவும் இருந்தது என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது (மாற்கு 15:42; லூக்கா 23:50-56; யோவான் 19:31).

இயேசு எவ்வளவு நேரம் சிலுவையில் இருந்தார் என்று நாம் அறிகிறோம்: ஆறு மணி நேரம். இந்த மணிநேரங்கள் காலத்தின் மையத்தினுடைய ஆப்புப் போன்ற பிரிக்கும் கருவியாக உள்ளது.

## முதல் மூன்று மணி நேரம்

உடனடியாக, இயேசுவுக்குக் கசப்புக்கலந்த காடி கொடுக்கப்பட்டது (மத்தேயு 27:34). இது திகைப்புக்குரிய விஷயம்! அவர் அதைப் புறக்கணித்தார். இயேசு வலிமறக்கச் செய்யும் பொருளை ஏற்றுக்கொள்ள

மறுத்தார். அவர் மயக்கம் தரும் பொருளை விரும்பவில்லை. அவர் சிலுவையின்மீது தமது முழு உணர்வையும் கொண்டவராக இருப்பார். அவர் தமது உணர்வுகளை விலையாகச் செலுத்துவதன்மூலம் வேதனையை மறத்துப்போகச் செய்யாதிருப்பார். வேதனையும் துன்பமும் சிலுவையில் பிரச்சனைகளாக இருக்கவில்லை. சிலுவையின் மீது இருந்த இயேசு ஒருவர் மாத்திரமே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறிந்த ஒரே நபராக இருந்தார்.

அவர் சிலுவையின்மீது தொங்கத் தொடங்கி வெகுவிரைவிலேயே மக்கள் அவரைக் கீழே இறங்குமாறு வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறத்தொடங்கினர் (மத்தேயு 27:39-43; மாற்கு 15:29-32; லூக்கா 23:35-37). அதில் (சிலுவையில் தொங்கிய) கள்ளர்களும் சேர்ந்து கொண்டனர் (மத்தேயு 27:44; மாற்கு 15:32; லூக்கா 23:39). என்ன ஒரு எதிர்ப்பு நிறைந்த கேவலப்படுத்தும் மனப்பான்மை! இது அவிசுவாசம் மற்றும் விசுவாச மின்மை ஆகியவற்றின் நிறைவான சீர்கேட்டைச் செயல்விளக்கப்படுத்திற்று. மனிதன் தான் விசுவாசிப்பதற்கான நிபந்தனைகளைத் தேவனிடத்தில் கூறக் கொண்டிருந்த தைரியம் எவ்வளவாக இருந்தது! இயேசு சிலுவையில் இருந்து இறங்கி வந்திருந்தால், பாவிகள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்களாகவும் நம்பிக்கை இல்லாதவர்களாகவும் இருந்திருப்பார்கள். இயேசு மரிப்பதற்கென்றே பிறந்தார். நாம் நித்திய வாழ்வுக்கென்று பிறப்பதற்காக அவர் நமக்காக மரித்தார் (ரோமர் 5:10). நீதியும் பரிசுத்தமும் உள்ளவரான தேவன், எவரொருவரையும் பாவத்திற்காகத் தண்டிக்காமல் மன்னிக்கமுடியாது. கல்வாரியில், இயேசு நமது பாவங்களுக்கான தண்டனையைச் சுமந்தார்.

மன்னிக்கப்பட்ட பாவங்களும்கூட விளைவுகளைக் கொண்டுள்ளன. இயேசு சிலுவையின்மீது இருந்து கூறிய முதல் கூற்றில், அவர் தம்மைத் துன்புறுத்தியவர்களின் இந்தப் பாவங்களை எண்ணாது இருக்கும்படி தேவனைக் கேட்டுக்கொண்டார்; இருப்பினும், அவர்களுடையது பாவங்களுக்கெல்லாம் பாவமாக இருந்தது! தேவன் எருசலேமை அழித்துப் போட்டார். யூதத்துவம், வேதாகமரீதியான தன் வரலாற்றில், மேசியாவின் வருகை என்ற - ஒரே ஒரு விஷயத்திற்காகவே நிலவியது. இயேசு வந்து, மேசியாவைப் பற்றிய எல்லாத் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார். யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தனர்! இது அவர்களை “மேசியாவைப் பற்றியவைகளுக்கு” புறம்பே வைத்தது என்பது நேர்மாறானது. அவர்கள் தேவனைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து, இராயனை ஏற்றுக்கொண்டனர் (யோவான் 19:14, 15). மேலும் அவர்கள் தங்கள்மீதும் தங்கள் பிள்ளைகள் மீதும் பாவத்தைக் கூட்டிக்கொள்ள இயேசுவின் இரத்தப்பழியையும் தங்கள்மீது சுமத்திக் கொண்டதின்மூலம் மேலும் வீழ்ந்தனர் (மத்தேயு 27:25).

இயேசு மீண்டும் பேசியபோது, அவர் தமக்கு அடுத்திருந்த கள்வனை நோக்கிப் பேசினார். மனிதகுலத்தில் உள்ள எல்லாருடைய பாவங்களுக்காகவும் இயேசு மரித்துக் கொண்டிருக்கையில், ஒரு பாவியை மன்னித்தல் என்பது அவருக்குப் பொருத்தமானதாகவே இருந்தது. லூக்கா 23:39-43ல்

*உள்ள உரையாடலைப் படியுங்கள். மரண தண்டனை நிறைவேற்றப் பட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு கள்ளன் உண்மையான மதத்தைக் கண்டடைகிறான். திகைப்புக்குரிய விஷயம்! சிலுவையினிடத்திற்கு வந்து, சிலுவையினிடத்தில் தங்கியிருங்கள். சிலுவை கள்ளனை இரட்சித்தது; சிலுவை நம்மையும் இரட்சிக்க முடியும்! நாம் கருத்துக்கள், சிந்தனைகள், தத்துவங்கள், மாயாவாதங்கள், அல்லது அறியாமை ஆகியவற்றினால் இரட்சிக்கப்பட முடியாது - இயேசு மாத்திரமே நம்மை இரட்சிக்க முடியும்.*

*மிகவும் வலிவான வேதனையில் மரித்துக்கொண்டிருந்த நிலையிலும், இயேசு தமது தாயான மரியாளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டார். யோவான் தனது தாயைப் போன்று அவளை (மரியாளை)க் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார் (யோவான் 19:26, 27). அவளது எஞ்சிய காலம் முழுவதும் யோவான் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டார் என்று பலர் நினைக்கின்றனர். நின்று நிதானியுங்கள். பிற்பாடு அவளின் மகன்களில் இருவர் புதிய ஏற்பாட்டில் உள்ள (யாக்கோபு மற்றும் யூதா என்ற) புத்தகங்களை எழுதினர். இயேசு உயிர்த்தெழுந்த வுடன் எருசலேமில் இருந்த மேல்வீட்டில் கூடிய ஜெபக் கூட்டத்தில் மரியாளும் அவளின் மகன்களில் சிலரும் இருந்தனர் (நடபடிகள் 1:13, 14). அவர்கள் தங்கள் தாயின் எதிர்காலத் தேவைகளைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்பது தெளிவு. மரியாளுக்கு சிலுவையின் அருகில் - மிகச்சரியாக சிலுவையின் அடியில்,* சிலுவையின் வேளையில் *உதவி தேவைப்பட்டது! இது அவளது மிகவும் கடினமான நாளாக இருந்தது, அவளது மிகநீண்ட இரவாக இருந்தது. இயேசு, “எனது தாயுடன் தங்கியிரு!” என்று கூறினார்.*

*கொல்கொதா அவலட்சணமாயிருக்கிறது. சிலுவையில் அறையப் படுதல் என்பது திரைப்படமானது இதுவரை சித்தரித்துள்ளதைவிடவும் அதிகம் கோரமானது. அன்பு நிறைந்த தகப்பன் ஒருவர் என்ன செய்ய முடியுமோ அதைத்தான் தேவன் செய்தார். அவர் பாவத்திற்கான தெய்வீகத் தண்டனையைத் தமது மகன் சுமக்கும்படி அனுமதித்தார்; அவர் தமது மகனிடத்தில் இருந்து தமது முகத்தை மறைத்துக் கொண் டார்.*

சிலுவையைத் தவிர ...
வேறு வழி எதுவும் இல்லை!

---

*குறிப்புகள்*

[1]*மத்தேயு 16:21; 17:23; 20:19; 27:63; மாற்கு 9:31; 10:34; லூக்கா 9:22; 13:32; 18:33; 24:7 ஆகிய வசனங்களைக் காணவும்.* [2]*சுவிசேஷங்கள் என்பது புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் ஆகும்; மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான். இந்தப் புத்தகங்கள் இயேசுவின் வாழ்வு, ஊழியம், மரணம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் வரலாற்றைக் கூறுகின்றன.*